**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 439/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 1 |
| Name | : | மைக்கேல், வயது 49 |
| Father Name/Husband Name | : | அமிர்தம் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | வேலை இல்லை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of July 2026.

**(Accused present).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர். சம்பவ காலத்தில் யார் என்னை கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அதனால் சந்தேகத்தின் பேரில் எதிரி மீது புகார்மனு கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது. **(அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு வழங்கப்பட்டு பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 10.05.2025 ஆம் தேதி காலை 09.00 மணியளவில் கோவில்பட்டி, இலுப்பையூரணி, தாமஸ் நகர், என்ஜிஓ காலனியில் உள்ள எனது வீட்டின் முன்பு நானும், எனது தங்கச்சியும் இருக்கும்போது ஆஜர் எதிரி எனது வீட்டிற்கு முன்பு நின்று கொண்டு எங்களை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டி,

கொலைமிரட்டல் விடுத்ததாகவும், இந்த சம்பவம் குறித்து நீங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்திற்கு வெளியே ஆஜர் எதிரியிடம் சமாதானம் ஆகிவிட்டதால் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A,M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.